நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2024–2025 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 204 (1)-ன்கீழ், திரு. கு. செல்வபெருந்தகை அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

(இ) பொது நிறுவனங்கள் குழு

2024–2025 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்வரும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. க. அன்பழகன்
2. திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
3. திரு. மு.பெ. கிரி
4. திரு. துரை. சந்திரசேகரன்
5. திரு. A.P. நந்தகுமார்
6. திரு. ஒய். பிரகாஷ்
7. திரு. த. வேலு
8. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
9. திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்
10. திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்

11. திரு. கடம்பூர் ராஜூ
12. திரு. ஆ. கோவிந்தசாமி
13. டாக்டர் சி. விஜயபாஸ்கர்
14. திரு. G. அசோகன்
15. திரு. ம. சிந்தனை செல்வன்
16. திரு. வி.பி. நாகைமாலி

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2024–2025 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213–ன்கீழ், திரு. A.P. நந்தகுமார் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) அவை உரிமைக் குழு

2024–2025 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee on Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்வரும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. N. அசோக்குமார்
2. திரு. கா. அண்ணாதுரை
3. திரு. மு. அப்துல் வஹாப்
4. திரு. நா. இராமகிருஷ்ணன்
5. முனைவர் த. இனிகோ இருதயராஜ்
6. திரு. க. கார்த்திகேயன்